Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போ : 389

தேசிய தினசரி

மலர் 14
தளம் 54

யாழ்ப்பாணம் பங்குனி 22 ஸபர் 19 செவ்வாய்க்கிழமை 4-4-72)

இனும்! இனும்!! இனும்!!!
புதுவருடத்தை முன்னிட்டு
யுனிக் றேடியோ
வாங்குபவர்களுக்கு
றேடியோ லைசென்ஸ் இனாமாக
எடுத்துக் கொடுக்கிறோம்.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி - றோட், யாழ்ப்பாணம்
போன்: 7447

8 APR 1972
GRADUATE LIBRARY

# இந்தியாவுக்கு இலங்கைப் பொருள் ஏற்றுமதி அதிகரிப்பு?

## புலியுடன் போராடினார்!

வவனியா, திங்கள் வவுனியாவிலிருந்து 7 மைல் தூரமுள்ள மடுக்கந்தைஎன்னும் இடத்தைச் சேர்ந்த பீ. குணசேகரா என்பவர் புலியினால் தாக்கப்பட்டு வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குணசேகரா காலையில் குளக்கரைக்குச் சென்றதாகவும் அங்கு சிறையப்பட்ட ஒரு மற்றையைப் பார்த்துக் குரைத்துக்கொண்டிருந்த நாயைவும், நாய் குரைக்குந்திசையில் உற்றுப் பார்த்தபோழுது குணசேகராவைக்கண்ட புலி அவர் மீது பாய்ந்து தாக்கியதாகவும் தம் பலம்கொண்டமட்டும் புலியுடன் போராடிக் கொண்டே குணசேகரா கூக்குரலிடவே சத்தம்கேட்ட மக்கள்கூடி விரட்டியதால் புலி ஓடிவிட்டதாகவும் இதுபற்றித் தெரியவந்தது.

## இலங்கரத்ன புதுடில்லி செல்கிறார்

கொழும்பு திங்கள் இந்தியாவுக்கு இலங்கைப் பொருள்களின் ஏற்றுமதியைக் கூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்தகவலை உள்நாட்டு வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த வருடம் இலங்கை இந்தியாவிடம் இருந்து 22 கோடி 90 லட்சம் ரூபாவுக்குப் பொருள் களை வாங்கியது. ஆனால் இந்தியா இலங்கையிடமிருந்து 10 கோடி ரூபாவுக்கே வாங்கியது. இரு நாடுகளுக்கும் இடையே ஏற்றுமதி இறக்குமதியில் இடைவெளி இருக்கக்கூடாதென்பதே எமது விருப்பம். தற்பொழுது இடைவெளியைக் குறைக்க முயலவேண்டும்.

இந்திய அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் இலங்கையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டதைக் கண்டு மகிழ்ச்சியுறும் அமைச்சர் இலங்கரத்ன மேலும் தெரிவிக்கையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 10 ஆயிரம் தொன் கொப்பரா 5 ஆயிரம் தொன் தெங்கு 40 ஆயிரம் தொன் பாக்கு ஆயிரம் தொன் காரீயம் நூறு தொன் கொக்கோ போன்றவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுமென்றும் இவற்றின் பெறுமதி கிட்டத்தட்ட 8 லட்சம் ரூபா என்றும் தெரிவித்தார்.

வெங்காய இறக்குமதிக் கட்டுப்பாட்டில் சில விதிகள் தளர்த்தப்படலாமெனவும் திரைப்படங்கள் பத்திரிகைகள் ஆகியவற்றின் இறக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

சிவல் தொழிலாளிகளான

## "இந்திய வம்சாவழியினரையும் சங்கத்தில் சேர்க்கவேண்டும்"

### மக்கள்கமிட்டிதலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். கிளிநொச்சி தொகுதியில் வாழும், வாசகால பெரியவில் உள்ள இந்திய வம்சவழியினர்கள் சீவல் தொழில் செய்தால் அவர்களையும் கள் உற்பத்தி விற்பனை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கவேண்டும்."

கிளிநொச்சி 1-ம் வட்டார மக்கள் கமிட்டி தலைவர் திரு. கே. சற்குணம், நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவிற்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இவ்விஷயமாக திரு. சற்குணம், திட்ட அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உதவி அதிகாரி, கிளிநொச்சி காரியாதிகாரி ஆகியோரிடமும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த இந்திய வம்சாவழியினர்கள் சீவல் தொழிலாளியாக இருந்தால் அவர்களையும் சங்கத்தில் சேர்க்க வேண்டுமென கிளிநொச்சி காரியாதிகாரியிடம் கோரியிருப்பதாகவும், திரு. சற்குணம் தெரிவித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## பொலிசாரை எச்சரித்தாராம்?

### ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன்

யாழ்ப்பாணம், செவ், வடபகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் கிரிமலை கேணியில் நீராடிய பொழுது மற்றவர்களுக்கு நீரை அடித்து விளையாடியதை மற்றவர்கள் ஆட்சேபிக்க அவர்களை அவர் கேவலமான வார்த்தைகளால் பேசியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்னையால் அவரும் அவரது நண்பர்களும் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்து பிணையில் விடப்பட்டனர்.

இதன்பின் இதே ஆட்சிமன்ற உறுப்பினரின் இன்னோர் மகனும் நண்பர்களும் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தை கடக்கையில் பொலிசாரை கவனமாக இருக்கும்படி சப்தமிட்டதைத் தொடர்ந்து பொலிசார் பஸ்ஸை மறித்து அவர்களைக் கைது செய்தனர். இவரும் பின் பிணையில் விடப்பட்டார்.

[சி பீ ஏ]

## பௌர்ணமி தினத்தில் சீவும் கள்ளு வடிசாலைக்கு

யாழ்ப்பாணம், செவ். 'ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் சீவப்படும் முழுக் கள்ளும் சாராயவடிசாலைக்கு வழங்கப்படும். வடக்கில் சாராயவடிசாலை நிறுவ தற்கான யந்திர சாதனங்கள் தயாராக இருக்கிறது. இவ்வடிசாலையை விரைவில் நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'.

திட்ட அபிவிருத்தி வேலைவாய்ப்பு உதவி அதிகாரி திரு. கே. சண்முகலிங்கம் தமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்:

திரு. சண்முகலிங்கம் மேலும் கூறியதாவது; வடக்கில் சாராய வடிசாலை நிறுவும்வரை பௌர்ணமி தினங்களில் இங்கு சீவப்படும் கள்ளு பவுஷர் மூலம் தென் பகுதி சாராயவடிசாலைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும். பௌர்ணமி தினங்களில் கள்ளுத் தவறணைகள் மூடப்பட்டிருக்குமாதலால், அன்றையதினம் சீவப்படும் கள்ளுமுழுவதும், சாராய வடிசாலையில் பயன்படுத்தப்படும்.

தவறணைத் திட்டத்தை நல்ல முறையில் அமுல்செய்வதற்கு கள் உற்பத்தி விற்பனைச்சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புக் கோரப்படும் லைசென்ஸ் இல்லாதவர்கள் யாராவது கள்ளுச் சீவினால் அவர்கள்பற்றிச் சங்க உறுப்பினர்கள் அறிவிக்கவேண்டும். சீவல் மரமுள்ள தனிப்பட்டவர்களின் காணிக்குள் சங்க உறுப்பினர்கள் கண்காணிப்பதற்குச் செல்லமுடியாத நிலைமைஏற்பட்டால் கிராம சேவகர்களுக்குப் புகார் செய்யலாம். கிராமசேவகர்கள் அக்காணிக்குள் சென்று புகார்பற்றி விசாரணை செய்வர்".

### கருப்பட் தொழில் பாதிக்காது

தவறணை முறையால் கருப்பட்டித்தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படாது. கருப்பட்டித் தொழில் நடத்துபவர்கள் மீதுகண்காணிப்பு இருக்காது ஒவ்வொரு தொகுதியிலும் கருப்பட்டித்தொழிலுக்கென சிலபகுதியில் உள்ள மரங்கள் ஒதுக்கப்படும். கருப்பணிமட்டும் சீவுபவர்கள் கள் உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை. அவர்கள் சீவல் லைசென்ஸ் பெறத் தேவையில்லை.

## மரண அறிவித்தல்

### ச. பிலிப்புப்பிள்ளை

சில்லாலை நல்லம்மா, விக்ரோரியா (அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பிராம்பத்தை), அந்தோனிப்பிள்ளை (உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்), மரியம்மா (கத்தோலிக்க பாடசாலை, பருத்தித்துறை), சந்திராப்பிள்ளை (அட்டன் நாஷனல் வங்கி, அன்னம்மா (கத்தோலிக்க பாடசாலை, சில்லாலை), கபிரியேல்பிள்ளை (கிராம சேவையாளர், சண்டிலிப்பாய்), மற்றிலடா, செலஸ்தின்பிள்ளை (மெய்கண்டான் அச்சகம், கொழும்பு), மற்றிறீக் இம்மனுவேல் (ரூபா றேடியோ கொம்பனி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனி பாலசிங்கம் (ஆல்லி கொக்கோ ஊறாப், மடுல்கெலே), ஆ. அந்தோனிப்பிள்ளை (லயன் பிறெஸ், தலவாக்கொல்லை), தோ. யோக்கீம்பிள்ளை ஐயர் அன் கொம்பனி, கொழும்பு). லூர்து சந்திராப்பிள்ளை, காலஞ்சென்ற பீ. அந்தோனிப்பிள்ளை (ஆசிரியர், முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), தலைமை கபிரியேல்பிள்ளை (கத்தோலிக்கபாடசாலை, இல்லாலை), ஆகியோரின் மாமனுருமாகிய சந்தியாப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்குச் சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

3904

**நாகம்ஸ் சினிமா**
கன்னுகம்
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
BULLET FOR
A BAD MAN
(வயதுவந்தவர்களுக்கு)

தினசரி 6-30, 9-45
ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி

**சாந்தி**
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
சுமதி என் சுந்தரி

**ராணி** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன்—ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
ஜுபிதாவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

**மகாத்மா** (நெல்லியடி)
தினசரி 3 காட்சிகள்
V.S.T. பிலிம்ஸ்
**குத்து விளக்கு**

**மனோகரா** [யாழ்ப்பாணம்]
ஜெமினி—பானுமதி
கல்யாண் பாலாஜி
நடித்த
தினசரி மாலை 6-30, 9-30
**பட்டத்து ராணி**
Daily 10-30 a.m, 4-45 p.m. only
A CHALLENGE FOR ROBIN HOOD

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
**ரிக்ஷாக்காரன்**

**லிடோ** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர்.
★ ஜெயலலிதா
★ சோ
★ அசோகன்
மற்றும் பலர் நடித்த
**கணவன்**


## வரி விளம்பரம்


இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

**சோதிடம்**
நட்சத்திரம், வயது, பூவின் பெயர், 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலங்கை ஆருடம், டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி. கொக்குவில். 4175

**தேவை**
மின்தறியில் வேலை செய்வதற்கு கைத்தறியில் மூன்று வருட அனுபவம் உள்ள பெண்கள் நற்சாட்சிப்பத்திரத்துடன் 10-4-72-க்குமுன் விண்ணப்பிக்கவும். கே. எஸ் குமாரசாமி, 235, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 4903

**விற்பனைக்கு**
தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆனைப்பந்தி சோதிட நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4904



**நியூ கஸலிங்டன்**
இணுவில்
தினசரி மாலை 4-45
Rossana Podesta
in
7 GOLDEN MEN
STRIKE AGAIN

தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
எங்க
வீட்டுப்பிள்ளை

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10-30 a.m.
Christopher Logan
in
FROM ISTANBUL
ORDERS TO KILL
(Color)

தினசரி 2-00 இரவு 9-45
ஜெமினி விஜயகுமாரி
நடித்த
கொடிமலர்

**யாழ். தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
மனசாட்சி


## பருத்தித்துறை நகரசபை கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

இச்சபையின் இரண்டு மோட்டார் லொறிகளையும், ஒரு டிராக்டரையும் முழுமையாகத் திருத்தம் செய்யவும்.

600 அடி நீளமான பத்திராவெ வேலிக் கான், 75 அடி நீளமான இரண்டாம் குறுக்குத்தெரு கான், 200 அடி நீளமான ஓடக்கரை ஒழுங்கை கான் அமைக்கவும், கான்கள் அமைப்பதற்கு மாத்திரம்...... கேள்விப்பத்திரங்கள் 10-4-1972 பி. ப. 2 மணி வரை ஒவ்வொன்றிற்கும் ரூபா 50/- வைப்புப்பணமும் திருப்பிக் கொடாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம் மேற்குறிப்பிட்ட திகதி 3 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்

வ. தர்மலிங்கம்
தலைவர்

நகரசபை, பருத்தித்துறை
நகரசபைக் காரியாலயம்
பருத்தித்துறை 1-4-1972
3903

## முல்லைத்தீவுப் பட்டணசபை கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19-ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிவரை பின்வரும் வேலைகளுக்குச் சீலைவைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்

1. லக்கி ஒழுங்கை திருத்த வேலை

கேள்விப்பத்திரப்பணம்
5 00 ரூபா
கேள்விப்பிணைப்பணம்
50-00 ரூபா

2. மேலும் சில வீதிகள் திருத்த வேலைக்கும். சேரி ஒழிப்புத்திட்ட வீடுகளுக்கு வெள்ளை அடித்தல் வேலைக்கும் சுற்றுமதில் கட்டும் வேலைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

மேலதிக விபரங்கள் யாவும் பட்டணசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் நேரில் கேட்டறிந்து கொள்ளலாம்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை
தலைவர்
பட்டணசபை,
முல்லைத்தீவு

பட்டணசபை அலுவலகம்
முல்லைத்தீவு, 1-4-72
3902


**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்ஜிஆர்-சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

**பவானி**
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி — சாவித்திரி
நடித்த
பாசமலர்

RAJAH (Jaffna)
Daily at 10-30, 2-30
6-30 & 10-00
Sasi Kapoor Asha Parekh
in
PYAR KA MAUSAM
பியார் கா மோசம்
(ஹிந்தி-கலர்)


## புனரமைக்கத் தீர்மானம்

உடுப்பிட்டி, திங்கள் 'மாணவர் கல்வி வளர்ச்சி பற்றிய ஒவ்வொரு பாடசாலையிலும் பெற்றோர்—ஆசிரியர்சங்கம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும் என்ற விதியை மறுதியின் மொன்னை பாராட்டக் கடியதே. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோரின் பங்கு அதிமுக்கியமானது'' என்று உடுப்பிட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. க. கதிரவேலு குறிப்பிட்டார்.

வித்தியாலயத்தின் புதிய இடத்திற்கு அமைவாக பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைப் புனருத்தாரணம் செய்வதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

உடுப்பிட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையை முன் பிருந்ததுபோல் ஒன்பதாம் வகுப்புவரையும் தரமுயர்த்தும்படி பாதிக்கப்பட்ட ஏழை மாணவர்களின் சார்பில் வித்தியாலயத்திற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த பலவேண்டுகோள்களின் மீது தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து திருவாளர்கள் கு. நவரத்தினசாமி, க. சேனாதிராசா, க. இளையதம்பி உட்படப் பலர் உரையாற்றினர்.

## இவர்கள் கோரிக்கை

உரும்பராய், திங்கள் யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் காரியதரிசி திரு. மு. இளங்கோ தலைமையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையைச் சந்தித்துப் புனரமைப்புச் செய்யப்பட்ட ஆரம்ப சங்கங்களில் வேலைக்கு ஆள் தெரியும்போது கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடாமை பற்றி எடுத்துக்கூறினர்.

அத்துடன் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினரிடம் மூன்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

மகஜரின் பிரதிகள் வர்த்தக மந்திரிக்கும், மேலதிக கூட்டுறவு ஆணையாளர் யாழ் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆரம்ப சங்கங்களில் வேலைசெய்யும் கூட்டுறவுப் பயிற்சிபெற்ற தற்காலிகஊழியர்களை உடனே நிரந்தரமாக்க வேண்டும் என்றும் கூட்டுறவுப் பரிசோதகர்களைத் தெரிவுசெய்யும்போது கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் மகஜரில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## அபின் வழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, திங்கள் 41 ரூத்தல் 15 அவுன்ஸ் அபின் வைத்திருந்ததாக அ. முருகேசு, ஆ. ஈரகுரு, தங்கம்மா என்ற மூவரிலும் கடந்த 1970-ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கினை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் விசாரணை செய்தார்.

விசாரணையின்போது இரண்டு எதிரிகள் தாம் குற்றவாளிகளென்றும் மூன்றாவது ஆள் குற்றவாளி எனவும் கூறியதைத் தொடர்ந்து மேல்விசாரணையை இம்மாதம் 14-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!
**யாழ். வின்ஸர் வெண்திரையில்**
தினசரி 10-15, 2-15, 6-15, 9-45
ஜெய்சங்கர், நாகேஷ், எம் ஆர் ஆர் வாசு, தேவர்,
சுருளி ராஜன், நாகையா, விஜயகுமாரி, விஜயலலிதா
நடித்த
**காலம் வெல்லும்**

# இரு முனைகளில் கடும் தாக்குதல்; குவாங்திரி

## நகருக்கு ஆபத்து!

## தென் வியட்னாம் படைகள் மேலும் பின்வாங்குகின்றன

சைகோன், ஏப்.3 வியட்னாமில் கடும் சண்டை நீடிக்கிறது. தென் வியட்னாம் மாகாணத் தலை நகரான குவாங்திரியை வியட்காங்கியரும் வடவியட்னாம் படைகளும் சுற்றி வளைத்துக் கொண்டுள்ளதாகவும் எந்நேரமும் அது வீழ்ச்சியடையலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது

ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட வட வியட்னாம் துருப்புக்கள் படைவிலக்கப் பிரதேசத்தைத் தாண்டி தென் வியட்னாமுக்குள் நுழைந்ததாக தென் வியட்னாம் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

வியட்காங்கியரும் வட வியட்னாம் படைகளும் இரு முனைகளில் தாக்குதல் நடத்தி தென் வியட்னாமுக்குள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். படைவிலக்கப் பகுதியின் தென்முனை வழியாகவும் வடக்கே கம்போடிய எல்லை வழியாகவும் இரு முனைகளில் தாக்குதல் நடத்தும் இப்படைகள் வடக்கே தென் வியட்னாம் தலைநகரான சைகோனுக்கு வடமேற்கில் 150 கிலோ மீட்டர் தொலைவில் இப்போது நிற்கின்றனர். படைவிலக்கப் பகுதியில் தெற்கே முன்னேறிச் செல்லும் படைகள் குவாங்திரி மாகாணத்தைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த மாகாணத்தில் உள்ள பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

பத்துக்காவல் நிலைகளையும் இரு தளங்களையும் கைவிட்டு தென் வியட்னாமியப் படைகள் பின்வாங்கியிருக்கின்றன

இச்சண்டையின் போது வட வியட்னாமியர் டாங்கிகளையும் ராக்கெட்டுகளையும் உபயோகிப்பதாகவும் முன்னைய சண்டைகளில் போலல்லாது இம்முறை அதிசக்தி வாய்ந்த ஆயுதங்களை அவர்கள் உபயோகிப்பதாகவும் தென் வியட்னாம் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

காலநிலை மோசமாக இருந்தாலும் பின்வாங்கிச் செல்லும் தென்வியட்நாம் படைகளுக்கு உதவியாக அமெரிக்க பி 52 போர் விமானங்கள் வடவியட்நாம், வியட்காங் இலக்குகள் மீது குண்டு வீசித் தாக்குவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

வியட்நாமில் ஏற்பட்டுள்ள கடுஞ்சண்டை காரணமாக வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை விலக்கிக்கொள்ளும் திட்டத்தில் இதுவரை மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை. ஆயினும் வியட்நாமில் இப்போது நடைபெறும் சண்டை திருப்திகரமான முடிவை அடையும் என்று வெள்ளைமாளிகை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## 'நாட்டைநான் கடனாளி ஆக்கவில்லை' —டட்லி

மாத்தளை, திங்கள் 'நான் நாட்டைக் கடனாளியாக்கிவிட்டேன் என என்மேல் குற்றஞ் சாட்டுகிறார்கள். இது அநியாயமானதொரு குற்றச்சாட்டாகும். நாட்டை அபிவிருத்தி செய்யவே நான் உலகநாடுகளிடம் கடன் உதவி பெற்றேன்".

மாத்தளை முன்னை நாள் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு அலிக் அலுவிஹாரே வீட்டில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் முன்னைநாள் பிரதமரும் டெடிகம தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவருமான திரு டட்லிசேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: அவுஸ்திரேலியா எங்களுக்கு இலவசமாகப் பல உதவிகளைச் செய்துள்ளது. கனடா 50 வருடங்களில் செலுத்தக்கூடியதாக வட்டியில்லாமல் கடனுதவி செய்தது. பிரிட்டனிடம் இருந்து பெற்ற கடனுக்கும் வட்டியில்லை. அதையும் 25 வருடங்களில் செலுத்தலாம்.

மக்களுக்கு உதவி செய்யவே இக்கடன்களைப் பெற்றேன், இவையெல்லாம் அந்நாடுகள் எனது அரசின்மேல் உள்ள நம்பிக்கையால் தான் வழங்கின. இன்று நாட்டு மக்கள் மெத்தவும் கஷ்டப்படுகிறார்கள், பல துறைகளில் மக்கள் சுதந்திரத்தை இழந்து நிற்பதைப்பார்க்கும் போது எனக்கு மிக வருத்தமாக இருக்கிறது".

## அலுவல்கள் தாமதம்

புத்தளம், திங். புத்தளம் இறப்பு பிறப்பு பதிவு நிலையத்தில் தேவையான அளவிற்கு மூன்று லிகிதர்களும் பெண்டர் ஒருவருமே இருப்பதால் இந் நிலைய அலுவல்கள் யாவும் தாமதமாகவே நடக்கின்றன.

பிறப்பு அல்லது இறப்புச் சாட்சிப்பத்திரம் தேவைப்படும் மக்கள் அவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பம் கொடுத்தால் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பின்னும் அவை கிடைப்பது கஷ்டமாகிறது எனப் புகார் தெரிவிக்கின்றனர்.

## 32,000 பேர் பரீட்சை எழுதுவர்

கோட்டை, திங்கள் இம்மாதம் 15ம் திகதி நடைபெறவிருக்கும் ஜீ. சீ. ஈ உயர்தர பரீட்சைக்கு 32,000 மாணவர்கள் தோற்றுகிறார்கள். இவர்களில் 60 வயோதிபர்களும் அடங்குவர்.

இந்தப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் நேர அட்டவணையாகியனவற்றையும் பரீட்சை இலாகா இவ்வாரம் அனுப்பி வைக்கிறது.

## மல்யுத்த கோதாவில் கைகலப்பு

கௌஹாத்தி, ஏப். 3 வடஇந்தியாவில் கௌஹாத்தி என்ற இடத்தில் பொலிசாருக்கும் மல்யுத்தப் பிரியர்களுக்குமிடையில் நடந்த கைகலப்பொன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். முப்பது பொலிசார் உட்படப் பலர் காயமடைந்தனர்.

மல்யுத்தம் நடந்த மைதானத்திற்குள் பலவந்தமாக நுழைய முயன்ற ஒரு கூட்டத்தினரைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொலிசார் எத்தனித்தபோதே இக்கைகலப்பு ஏற்பட்டது.

## 1007 பேர் கைது

பிராக், ஏப் 3 துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் வைத்திருந்ததாக செக்கோஸ்லவாக்கியாவில் சென்ற சில தினங்களில் ஆயிரத்தேழுபேர் கைது செய்யப்பட்டனர்.

## மக்காரியோஸ் புதிய திட்டம்

நிக்கோசியா, ஏப். 3 சைப்பிரசில் ஆயுதப்பரிகரணம் ஏற்படுத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக சைப்பிரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் தெரிவித்துள்ளார். சைப்பிரஸ் கிரேக்கர்களுக்கும் துருக்கி சைப்பிரியர்களுக்கு மிடையிலுள்ள யுத்தநிலையை முடிவுக்குக் கொண்டுவர இருதரப்பினரும் ஆயுதங்களைக் கைவிடுவது தான் அதிபரின் திட்டமாகும்.

## இயேசுநாதர் திருப்பாடுகள்

வல்வெட்டித்துறை, திங்கள் கரவெட்டி புனித தோமையார் ஆலயமுன்றலில் இயேசுநாதர் திருப்பாடுகளின் காட்சிகள் மிகச் சிறப்பாக நடித்துக் காண்பிக்கப்பட்டன. வண. பிதா. ஜே. எஸ். ஜெயசேகரம்சுவாமிகள் ஆராதனைகளை நிறைவேற்றி வைத்தார்.

## தெரிவு

மீசாலை, திங்கள் சாவகச்சேரி கிராமசபையின் 5-ம் வட்டார கல்குழுக் கூட்டம் கிராமசபைத்தலைவர் திரு. வி. சுப்பையா தலைமையில் கூடி இவ்வட்டார அங்கத்தவர் திரு. நா. அருணாசலத்தை கல்குழுச் செயலாளராகத் தெரிவு செய்துள்ளது.

## அமெரிக்கா, ரஷ்யாமீது சீனப்பிரதமர் 'குற்றச்சாட்டு

பீகிங், ஏப் 3 சீனாவுக்கு விஜயம் செய்துள்ள மோல்டாப் பிரதமர் டாக்டர் மின்டோவ் நேற்று சீனப் பிரதமர் சூ-என்-லாயைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

டாக்டர் மின்டோவைக் கௌரவிக்குமுகமாக நடந்த இராவிருந்துபசாரமொன்றில் டாக்டர் மின்டோவ் பேசுகையில் சீனாவிடம் பொருளாதார உதவிகோரி தாம் வந்திருப்பதை நாசூக்காக வெளியிட்டார்.

இவ் வைபவத்தில் சீனப் பிரதமர் சூ-என்-லாய் பேசுகையில் மோல்ட்டாவின் சுதந்திரத்தையும் சுயாதிபத்திய உரிமையையும் பாதுகாப்பதற்கு சீனா எப்போதும் உதவியாக இருக்குமென்றும் உறுதியளித்தார்.

மெடிட்டரேனியன் பகுதியில் அமைதியைக் குலைக்க அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சேர்ந்து சதி செய்வதாகவும் சூ-என்-லாய் குற்றஞ்சாட்டினார்.

## நெடுந்தீவு படகுசேவை: அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ் "நெடுந்தீவு குறிகாட்டுவான் போக்குவரத்துச் சேவைக்கென நான்கு அரசாங்கப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதும் இச்சேவை திருப்திகரமற்ற முறையிலேயே நடைபெறுகிறது. இதனைச் சீராக நடாத்துவதற்கு நெடுந்தீவு - குறிகாட்டுவான் போக்குவரத்துச் சேவைக்கென தனியிலாகா ஒன்றை நெடுந்தீவில் நிறுவவும் இங்கு சேவையில் ஈடுபடும் படகுகள் அடிக்கடி பழுதடைவதினால் படகு திருத்தும் நிலையமொன்றை நெடுந்தீவில் அமைத்துத் தருக"

இவ்வாறு நெடுந்தீவு முன்னேற்றக்கழக நிர்வாகக் காரியதரிசி திரு. நா. இலட்சுமணராசா நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நீண்டகாலமாக [illegible] படகு திருத்துமிடத்தில் பலகாலமாக திருத்தத்திற்கென விடப்பட்ட ராஜேஸ்வரி எனும் படகு கடந்த மாதம் சேவையில் ஈடுபட்ட போதும் சிலநாட்களின்பின் மீண்டும் பழுதடைந்துள்ளது. 17 வருடகாலமாகச் சேவையில் ஈடுபட்டுள்ள இப் படகு ஒருவருடத்திலும் பூரணசேவையாற்றியதில்லை. தற்போது சேவையில் உள்ள அலையரசி எனும் படகும் கப்பல் முறிந்து நீர் உட்புகும் நிலையில் உள்ளது. இந்நிலை நீடிக்குமானால் கடந்தவருடம் நடைபெற்ற பாலதீவுச் சம்பவம்போல் இங்கும் இடம்பெற ஏதுவாகும். சிப்பந்திகளிடையிலுள்ள போட்டி மனப்பான்மைக்கும் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மைக்கும் நெடுந்தீவு மக்கள் தம் உயிரைப் பணயம்வைக்க வேண்டிய நிலையை மாற்றி அமைத்தல் வேண்டும். தற்போது [illegible]லுள்ள படகுதிருத்தும் நிலையம் நான்கு படகுகளையும் சீர்திருத்தி ஒழுங்காக சேவைக்குவிடமுடியாத நிலையில் உள்ளது.

## பங்களாதேஷில் மீண்டும் புயல்: 70 பேர் பலி; பலர்காயம்

வாஷிங்டன், ஏப். 3 பங்களாதேஷை இன்னும் சில தினங்களுக்குள் அமெரிக்கா அங்கீகரிக்கவிருக்கிறது. பங்களாதேஷுடன் ராஜீய உறவை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமென்று அதிபர் நிக்ஸன் கருதுகிறாராம்.

### பாகிஸ்தானில் வங்காளிகள்

பங்களாதேஷுக்கு விஜயம் செய்துள்ள ஐ. நா. அகதிகள் ஹைகமிஷனர் சத்ருதின் ஆகாகானுக்கு டாக்காவில் அளிக்கப்பட்ட இராவிருந்துபசாரமொன்றில் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் அப்துல் சமாத் ஆஸாத் பேசுகையில் பாகிஸ்தானிலுள்ள வங்காளிகளில் கடைசி வங்காளியும் பங்களாதேஷுக்கு கௌரவத்துடனும் மதிப்புடனும் திரும்பி வந்துசேரும் வரை பங்களாதேஷ் மக்கள் நிம்மதியடைய மாட்டார்களென்று கூறினார்.

பாகிஸ்தானியர் செய்த அட்டூழியங்களை பங்களாதேஷ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லையாயினும் ஐந்து லட்சம் வங்காளிகள் பாகிஸ்தானில் இன்னும் அவதிப்படுவது பெரும் கவலையளிப்பதாகும் என்றும் அப்துல் சமாத் தெரிவித்தார்.

### புயலுக்கு 70 பேர் பலி

பங்களாதேஷின் மைமன்சிங் பகுதியில் நேற்று திடீரென்று வீசிய சூறாவளிக்கு எழுபது பேர் பலியானார்கள். முந்நூற்றிஐம்பது பேர் காயமடைந்தனர். இருநூற்றி ஐம்பது மைல் வேகத்தில் வீசிய புயல் இருநிமிட நேரம் நீடித்தது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. முப்பதினாயிரம் பேர் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். பாலங்களும் சேதமடைந்தன.

தலைநகரான டாக்காவிலும் அதைச்சூழ்ந்த பகுதிகளிலும் பலத்த மழை பெய்ததுடன் கடுங்காற்றும் வீசியது

மைமன்சிங் பகுதியில் வீசிய புயல்காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் அனுதாபச் செய்தியனுப்பியதுடன் அவர்களுக்கு உடனடி நிவாரண உதவியளிக்கவும் உத்தரவிட்டார். நாளை அவர் மைமன்சிங் மாவட்டத்துக்கு நேரில் சென்று பார்வையிடுவார்.

## காங்கேசன்துறையில் அமெரிக்கமாவுக்கப்பல்

மாவிட்டபுரம், திங். பலகால இடைவெளிக்குப் பின் காங்கேசன்துறைக்கு மாவுக்கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது. காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு பலகாலமாகக் கப்பல் வராததால் இப்பகுதித் தொழிலாளர் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததை யடுத்து இதுபற்றி உணவு அதிகாரிகள் இங்கு வந்து ஆராய்ந்ததன் பயனாக காங்கேசன்துறைக்கு இம் மாவுக் கப்பல் வந்து சேர்ந்ததாக அறியப்படுகிறது.

'விலைபிரேம்' என்றபெயருடைய இக்கப்பல் 9,190 தொன்மாவை ஏற்றிக் கொண்டு அமெரிக்காவில் இருந்து வந்துள்ளது.

இக்கப்பல் ஏஜண்டான திரு. க. ஜெயபாலசிங்கம் கொம்பனியாரும், யாழ் மாவட்ட துறைமுகசேவைத் தொழிலாளர் சங்கமும் கப்பலிலிருந்து மாவை இறக்கும் வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

## நியமனம்

மீசாலை, திங்கள். உசன் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கே. சோமபாலன், வவுனியா சோயிற் புதுக்குளம் அரசினர் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சிவராசசிங்கம் வவுனியா பன்றிக்கெய்தகுளம் அரசினர் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். மிருசுவில் ஆர். சி. பாடசாலை ஆசிரியை திருமதி இ. சின்னத்தம்பி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்குத் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

மீசாலை, திங்கள். வவுனியா மாவட்ட நெளுக்குளம் கனிஷ்ட மகாவித்தியாலய அதிபர் திரு. அ. குமாரவேலு சரசாலை சரஸ்வதி கனிஷ்ட மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். நெளுக்குளம் வித்தியாலயத்துக்கு சமீபத்தில் 2-ம் தரத் தலைமை ஆசிரியர் தெரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. எம். கார்த்திகேசு நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

## நல்லூரில் திருநெறிய தெய்வீக மகாநாடு

யாழ்ப்பாணம், சவ். அகில இலங்கை திருநெறி தெய்வீக மகாநாடு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இம்மாதம் 14-ம் திகதிமுதல் நான்கு நாட்களுக்கு நடைபெறவிருக்கிறது.

திருமுறைப் பண்ணிசை, இன்னிசைவிரிவுரை, கவியரங்கம், மங்கல இசை, புராண படனம், கதாப்பிரசங்கம், திருமுறை ஊர்வலம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இம்மாதம் 18-ம் திகதி ஞானப்பால் விழாவும் 19ம் திகதி பொற்றூர் விழாவும், 20-ம் திகதி முத்துப்பல்லக்கு விழாவும் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டையொட்டி பன்னிரு திருமுறை ஆராய்ச்சிக் கட்டுரைப்போட்டியும் பாலர் திருமுறைப் பண்ணிசைப் போட்டியும் நடைபெறும். கட்டுரைப் போட்டி 25, 50 75 வயதுக் குட்பட்டவர்களுக்காக முறையே 3 பிரிவுகளாக நடைபெறும் பண்ணிசைப் போட்டி 10, 20 வயதுக் குட்பட்டவர்களுக்காக இருபோட்டிகள் நடைபெறும். இப்போட்டிகளில் பரிசுகளாக திருமுறை நூல்கள் வழங்கப்படும்.

## மகனின் திருமணத்தை விரும்பாத தந்தை தற்கொலை

யாழ்ப்பாணம், செவ். மகனின் திருமணத்தால் வெறுப்பேற்பட்ட தந்தை ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்ட சம்பவமொன்று உடுவில் தெற்கில் நடைபெற்றுள்ளது.

சின்னக்குட்டி காசிபன் என்ற 60 வயதுடையவரின் மரணம்பற்றி மரணவிசாரணையின் பொழுது தெரிவிக்கப்பட்டதாவது:- காலம் சென்றவர் தனக்கு விருப்பமில்லாத இடத்தில் தனது ஒரே மகன் திருமணம்பதிவு செய்துகொண்டதால் அவரது திருமணத்துக்கு முன் தன் உயிரைமாய்த்துக் கொள்ளப்போவதாகப் பலதடவை கூறினார் என்று கூறப்பட்டது இவரது மரணத்தில் தங்களுக்கு எவ்வித சந்தேகமுமில்லையெனவும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மரண விசாரணை நடத்திய மல்லாகம் உடுவில்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. இ. பாலசுப்பிரமணியம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## "சொந்த பிரதேசத்தில் கடமையாற்ற வாய்ப்பு"

யாழ்ப்பாணம், செவ். தபால்தந்தித் தொடர்பு கணக்காளர் பிராந்திய காரியாலயத்தை யாழ்ப்பாணத்தில் பிரதம கணக்காளர் திரு. கே. சி. துரைராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றித்திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் கணக்காளர்பகுதி நிர்வாக உதவியாளர் திரு. பி. வன்னியசிங்கம், தமிழ்ப்பிரிவு இஞ்ஜினியர் திரு. சி. கந்தசாமி மற்றும் கணக்காளர் பகுதி ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

திரு. வி. வெயாவரத்தினம் பேசும்போது ஊழியர்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் கடமையாற்றக் கூடிய வாய்ப்பு இப்பிராந்திய காரியாலயத்தின்மூலம் ஏற்பட்டுள்ளதென்றுங் கூறினார்.

திரு. பி. டி. ஜெயரத்தின உரையாற்றும்போது இப்படியான பிராந்திய காரியாலயம் ஊழியர்களின் கஷ்டங்களைப் போக்க உதவுமென்றும் கூறினார்.

## 'நல்ல சமுதாயம் உருவாக...'

மாவிட்டபுரம், திங்கள் "இன்று நாட்டின் பிரச்னைகளை நீக்கும் வகையில் நல்ல சமுதாயம் உருவாக ஆசிரியர்களின்பணி தேவைப்படுகிறது" என்று வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற அதிபர் திருமதி க ஆறுமுகதாசன் மற்றும் ஆசிரியர்களான திருமதி இக்கரராசஜா திரு. எஸ். அருணானந்தம் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசுகையில் வித்தியாலய அதிபர் திரு. இ. ஆறுமுகம் கூறினார்.

வித்தியாலய மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், 'சமுதாய மறுமலர்ச்சிக்கான கல்வியை அளிக்கும் புனித சேவையாளர்களான ஆசிரியர்கள் கடமை உணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்' என்றார்

பண்டிதர் இ நமசிவாயம் மற்றும் ஊர் பாலசுந்தரம் திரு. எம் இளைத்துரை உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்

## கைத்தொழில் பிரச்னை பற்றி பேசப்படும்

கொழும்பு, திங்கள் "வாரம் புதுடில்லியில் நடைபெறவிருக்கும்" பேச்சுவார்த்தைகளின்போது இலங்கை இந்திய கைத்தொழில் பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பேசித் தீர்க்கப்படும் என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி இலங்கரத்தின தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் இத்தகவலை வெளியிட்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நவம்பர் மாதத்தில் உத்தியோக ரீதியான பேச்சு வார்த்தையின் பொழுது 6 அம்சங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இருநாடுகளும் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள்பற்றி புதுடில்லி பேச்சுவார்த்தையின் பொழுது பேசப்படும் என்றார்.

இந்தக் கைத்தொழில்களை இரு அரசுகளும் இணைந்து செய்வதா அல்லது இருநாடுகளிலுமுள்ள தனியார் நிறுவனங்கள் இணைந்து செய்வதா அல்லது பொருள்களுக்கு இந்தியா சந்தை வாய்ப்பளிக்கக் கூடியதாக இலங்கையே ஏற்றுக் கொள்வதா என்பது பற்றிய விஷயங்கள் புதுடில்லிப் பேச்சுவார்த்தையின் பொழுது முடிவு செய்யப்படும்.

அரசாங்க பங்குகளையே மேலும் ஏற்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்க அரசு விரும்புவதாகத் தெரிகிறது. நாட்டின் பொருளாதார வளத்துக்கு இந்த ஒத்துழைப்பு மிகவும் உதவியாக இருக்குமென நம்பப்படுகிறது. காரீயம், ரப்பர்பொருள்கள் மின்சாரம் மற்றும் மோட்டார் உபகரணங்கள் ஆகிய கைத்தொழில் விஷயங்களிலேயே இந்திய ஒத்துழைப்பை இலங்கை நாடவிருக்கிறது. [இ.பி.ஏ]

## அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள் ஒருபோத்தல் கள்ளு மேலதிகமாக வைத்திருந்ததாக ஒருநபர்மீது தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறைநீதிபதி திரு ஜே ஜீ ஆசீர்வாதம் அவருக்கு 30 ரூபா அபராதம் விதித்தார்.

## 'தன்னை அர்ப்பணித்த பிரான்'

பருத்தித்துறை. திங். 'பிறர் துயர் துடைத்து. சுபிட்ச வாழ்வு காண வேண்டுமென்ற முதிர்ந்த ஆத்மீக ஞானத்தினால் தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்த இயேசு பிரான் மீண்டும் உயிர்த்தெழுந்தாரென்பதில் ஆழ்ந்த தத்துவம் பொதிந்துள்ளது. உடலைக் கூறுகூறாக வெட்டினாலும் பரிசுத்த ஆத்மாவை எச்சக்தியும் எதுவும் செய்ய முடியாது. உண்மைத்துய்மை, அன்பு. ஆழ்ந்த அறிவும் உள்ளவன் தெய்வீகத் தன்மை பெறுகிறான்.

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு கரவெட்டி தேவாலய கோயிலில் நடைபெற்ற விசேட பூசையை நடத்தி வைத்த வண பிதா எஸ். ஜெயசேகரம் கூறினார்.

## லைசென்ஸ் இன்றி மாடு வெட்டினாராம்

மாவிட்டபுரம், திங்கள் லைசென்ஸ் இல்லாமல் மாடு வெட்டினாராம். இவர் மீது யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குத் தொடர விருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் திரு. எஸ் தவலிங்கம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள திடீர் சோதனைக்குழு யாழ் நகரத்தில் திடீர்சோதனைகள் நடத்திவருவது தெரிந்ததே. மேற்படி கோஷ்டி திரு. எஸ் தவலிங்கம் தலைமையில் யாழ் தேவாலக்குளத்தில் திடீர்சோதனைகள் நடத்தியதின் பயனாக அனுமதிப் பத்திரம் இன்றி மாடு வெட்டிய நபரைக் கைது செய்தது.

இந்நபர்மீது யாழ். மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மேன்மேல் முன் வழக்கு தாக்கல்செய்யப்படவுள்ளது

## 47வது ஆண்டு விழா கொண்டாடினர்

யாழ்ப்பாணம், செவ்வாய் குப்பிழான் விக்னேஸ்வர வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்க 47வது ஆண்டு விழா தலைவர் பண்டிதர் திரு செ நடராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தப்பட்ட சமய பாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சபை வழங்கிய புத்தகப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் சங்க உபதலைவர் திரு க சின்னப்பு உரியவர்களுக்கு வழங்கினார்; வழங்கினார் க வைரவநாதன் பாடசாலை வளர்ச்சிகளுக்கான ஆலோசனைகளைத் தெரிவித்துப் பேசினார்.

சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: செ நடராசா, உபதலைவர்: க சின்னப்பு, காரியதரிசி க வைரவநாதன், உபகாரியதரிசி திருமதி கனகம்மா, நிர்வாக சபை உறுப்பினர்களாக 6 பேர் தெரியப்பட்டனர்.

## விசாரணைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ் கொம்மாந்துறை கொலை வழக்கு, நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜெயபத்திரனால் அடுத்த மாதம் 3-ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி கொலைவழக்கு நேற்று விசாரணைக்கு போடப்பட்டிருந்தது. இவ்வழக்கையும் நீதியரசர் அடுத்த மாதம் 26-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

முடிக்குரியதரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானார். அசைஸ் விசாரணை இன்றுகாலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## தொலைபேசிப் பாவனைப் பெட்டி

யாழ்ப்பாணம் செவ்வாய் யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைபேசிப் பாவனைப் பெட்டி ஒன்று திறக்கப்பட்டுள்ளது. ஸ்ரான்லி வீதியில் கட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் எதிரில் அமைக்கப்பட்டுள்ள இப்பெட்டியை யாழ்ப்பாண மேயர் திரு அல்பிரட் துரையப்பா திறந்துவைத்தார்.

## மீண்டும் வீதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம் செவ்வாய் யாழ்ப்பாண நவீன மார்க்கட்டுக்கு ஊடாக ஆஸ்பத்திரி வீதியையும், மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் கஸ்தூரியார் வீதியின் ஒரு பகுதி மீண்டும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நவீன மார்க்கட் கட்டட வேலைகளுக்காகச் சுமார் 2 வருட காலம் இவ்வீதி பாவனைக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

## மேயர் கடமையேற்றார்

யாழ்ப்பாணம் செவ்வாய் சுகவீனம் காரணமாக இரு வாரங்கள் ஓய்வுபெற்று வந்த யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேற்று மேயர் காரியாலயத்திற்கு வந்து சிறிது நேரம் கடமையாற்றினார்.

## இந்தியாவுக்கு—

[1-ம் பக்கத் தொடர்ச்சி மதிக் கட்டுப்பாட்டிலும் சில மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தெரிகிறது.

அமைச்சர் இலங்கரத்ன செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரை புதுடில்லியில் இருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. (சிபிஏ)

பீகிங், ஏப். 3 மொக்கடசபிரதமர் திரு. மின்டேசப் பீகிங் வந்துள்ளார். சீனவுடன் ராஜிய வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் சீனவிடமிருந்து பொருளாதார உதவி பெறவும் அவரது சீன விஜயம் பயன் பெறும் என்று கூறப்படுகிறது.

## 'வரவு செலவுக்கு' பதில் 'பற்றுவரவு'

கோட்டை, திங்கள் வர்த்தகக் கல்வி போதிக்கும் பாடசாலைகள் போதனையில் 'வரவு செலவு' என்ற பதத்தை இதுவரை உபயோகித்து வந்திருக்கிறார்கள்.

இச்சொல்லைமாற்றி இனிமேல் 'பற்றுவரவு' என்ற சொல்லை உபயோகிக்குமாறு கல்வித்திணைக்களம் சகல வர்த்தகக்கல்வி போதனையாளர்க்கும் அறிவித்துள்ளது.

## அறிவித்தல்

**மின் விநியோகத்தடை**

மின்சார திருத்த வேலைகள் செய்யவிருப்பதால் 5-4-72 தொடக்கம் 12-4-72 வரையும் ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்திலிருந்து காங்கேசன்துறை வீதிச் சந்திவரையும் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைக்கும் மின் விநியோகம் தடைசெய்யப்படும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
3905 3-4-72

